உ
சிவமயம்






அமரர்.

# வேலுப்பிள்ளை கனகரத்தினம்

அவர்களின்

# கனகதீபம்

30.04.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பாலாவோடை களபூமி காரைநகர் சைவ வேலான் மரபில்
தொல்குடித் தோன்றலான இராமுடையார்
வம்சத்தில் உதித்த

அமரர்

# திரு.கனகரத்தினம் வேலுப்பிள்ளை

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த



# கனகதீபம்



**30.04.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
நினைவாக எல்லாம் வல்ல
இறைவனின் பாதங்களில்
எமது இதயத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெற வேண்டுமென
இறைவனை பிரார்த்தித்து
அமரர் தன் பாதக்கமலங்களில்
இந்நினைவுக்காவியத்தை
சமர்ப்பிக்கின்றோம்.



இங்ஙனம்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
25.05.1945

இறைவன் மடியில்
31.03.2009

## அமரர்.
# வேலுப்பிள்ளை கனகரத்தினம்

அவர்களின்

## திதி வெண்பா

பூண்மலி சர்வதாரி பூர்வபக்க பஞ்சமியில்
மாண்பங் குனிரோ கிணியதிலே - ஈண்டினிய
காரையூர் கனகரத்தினம் காளியங்கன் சேவடிக்கீழ்
தாரையெனத் தன்னுடலம் சேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினால் கண்ணிற் பணியின் கனிந்து

## தேவாரம்

ஓசை பொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருமகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்தவெம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோவேன் யர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ அருளில்லை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டேய்
வருகவென் றருள்புரி யாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறவுளறி
உமை மணவாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
வைச செந்நெறி தான் தழைத்தோங்குக
தெய்வ வெண் திருநீறும் சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாவோடை களபூமி காரைநகர் சைவ வேளான் மரபில் தொல்குடித் தோன்றலான
இராமுடையார் வம்சத்தில் உதித்த

**திரு.கந்தர் வேலுப்பிள்ளை அவர்களின் கனிஸ்ட புதல்வன்**

**அமரர்.திரு.வேலுப்பிள்ளை கனகரத்தினம்**

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழமணித்திருநாட்டின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடமேற்கு ஈழத்துச்சிதம்பரம் என்னும் புண்ணிய தலத்தை தன்னகத்தே கொண்டுள்ளதும் கற்றவரும் வணிகர்களும் வாரிவழங்கும் வள்ளல்களும் நீறணிந்த பெருமானை திருநீறணிந்தே வழிபடும் வழிபாட்டாளர்களும் வாழ்ந்து வருகின்ற காரைநகரில் கார் வழங்க நெல்விளையும் களபூமிப்பதியில் பார்விளங்க வீற்றிருக்கும் முத்துமாரி அம்பாளின் கடைக்கண் பார்வை அருள் பரவும் பாலாவோடை என்னும் மண்ணில் வழிவழி சைவவம்சத்தில் வேளான் மரபில் இராமுடையார் கத்தறை என்னும் பெயர் கொண்ட வேலுப்பிள்ளை அவர்களுக்கும் அவரின் துணைவியாரான சின்னம்மா அவர்களுக்கும் கனிஷ்ட புதல்வனாக 1945ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி அமரர் திரு.வே. கனகரத்தினம் அவதரித்தார். அன்னாரின் உடன் பிறந்த சகோதரர்களாக சுப்பிரமணியம், தம்பிராசா, தவமணி, மகேஸ்வரி ஆகியோர் ஆவார்.

அன்னார் இளம்பிறைச் சந்திரன் போல வளரும் பருவத்தே அவரின் தந்தை தாயார் அவருக்கு ஆரம்பகல்வியை பாலாவோடை தமிழ் கலவன் பாடசாலையில் பயிற்று வித்தனர். அவரின் கல்வி வளர்ச்சியைக் கண்ட பெற்றோர்கள் உயர்கல்வியை கற்பதற்காக காரைநகர் இந்துக்கல்லூரியில் (யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்) சேர்ந்தனர். இந்துக்கல்லூரியில் கல்வி கற்று க.பொ.சாதரணதரத்தில் (G.C.E. O/L) சித்தி அடைந்த பின்னர் படிப்பை இடைநிறுத்தி குடும்பத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்தும் நோக்குடன் 1965ம் ஆண்டு தம்புளை முருகன் ஸ்ரோர்ஸ் என்னும் வர்த்தக நிலையத்தை மைத்துனருடன் பங்காளியாக ஸ்தாபனத்தை 1977 ஆம் ஆண்டு இனக்கலவரம் வரை நடாத்தி வந்தார்.

1972ம் ஆண்டு தம்புள்ளை முருகன் ஸ்ரோர்ஸ் வர்த்தக ஸ்தாபனத்தை நடத்திவரும் காலத்தில் அவரின் பெற்றோர்கள் முதலிவத்தன் வழித் தோன்றலாகிய சண்முகம் கந்தையா வள்ளியம்மை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி சரஸ்வதி அவர்களை 1972ம் ஆண்டு தை மாதம் திருமணம் நடாத்தி வைத்தார்கள், கனகரத்தினம் சரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடாத்தி உற்றார், உறவினரும் ஊராரும் மதிக்கத்தக்க வகையில் வாழ்ந்த காலத்தில் இல்லறத்தின் பயனாக லோகேஸ்வரன், சந்திரேஸ்வரன், மகேந்திரேஸ்வரன், கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், ஜெகதீஸ்வரி, என்னும் பிள்ளைச்செல்வங்கள் பெற்றனர். அக் காலத்தில் தனது சொந்த இடமான கணவோடையில் வசித்து வந்தார். .1978ம்ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டு வரை S.V.முருகேசு (S.V.M) சிற்றி ஏஜென்சி என்னும் நிறுவனத்தில் முகாமையாளராக கடமை புரிந்தார். 1991ம் ஆண்டு புலம்பெயர்ந்து வட்டுக்கோட்டை மாவடியில் இருந்த பொழுது மாவடிச் சந்தியில் ரட்ணம் களஞ்சியம் என்னும் வர்த்தக ஸ்தாபனத்தை நடாத்தி வந்தார். 1995ம் ஆண்டு முன்னேறிப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையினால் மல்லாவி துணுக்காயில் வசித்து வந்தார். பின்னர் 1999ம் ஆண்டு புலம்பெயர்ந்து வவுனியா தோணிக்கல்லில் சரஸ்வதி ஸ்ரோர்ஸ் என்னும் வர்த்தக ஸ்தாபனத்தை பிள்ளைகளுடன் கூடி நடாத்தி வந்தார்.

தனது மூத்த மகனான லோகேஸ்வரன் அவர்களுக்கு மணற்காடு அம்மன் கோவிலடியில் வசிக்கும் சிவப்பிரகாசம் சவுந்தரம் தம்பதியினரின் மகளான சிவமலரை 2003ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி திருமணம் செய்து வைத்தார். இரண்டாவது மகனான சந்திரேஸ்வரன் அவர்களுக்கு காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவமணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி பவாணியை திருமணம் செய்து வைத்தார். அடுத்த மகனான கேதீஸ்வரன் அவர்களுக்கு நல்லூரடி அரியாலையைச் சேர்ந்த டேவிட், தங்கமணி தம்பதிகளின் புதல்வி நிஷாந்தினியை திருமணம் செய்து வைத்தார்.

உயர்ந்த பண்பையும் சாந்தமான குணத்தையும் சீரிய கொள்கையையும் உடையவராக மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை நடாத்திய கனகரத்தினம் அவர்கள் நோயுற்று ஒரு சில நாட்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த பொழுது 31.03.2009 செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் தனது 64வது வயதில் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு தென்னாட்டு உறையும் சிவபெருமான் கழல் சேர்ந்தார்.

*அன்னார் கனகரத்தினம் அவர்ககளின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல காரைநகர் ஈழத்துச் சிதம்பர சுந்தரேஸ்வரர் பெருமானின் திருவருளையும் காரைநகர் களபூமி தன்னை விநாயகப் பெருமானின் திருவருளையும் பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரி அம்மனின் திருவருளையும் தீக்கரை முருகப் பெருமானின் திருவருளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

அவரது ஆத்மா சிவப்பேறெய்தி மகிழ பிரார்த்திப்போம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனே கண்கண்ட தெய்வம்

ஐயா உங்களை என் இரு கண்கொண்டு தேடுகின்றேன். ஆனால் உங்களை காண முடியவில்லை எங்கே ஐயா சென்று விட்டீர்கள். சிற்றின்ப வாழ்க்கையைத் துறந்து மெஞ்ஞானம் தேடிச் சென்றீரகளோ? ஐயா கரம் பிடித்த நாள் முதல் கண்ணும் கருத்துமாக என்னைப் பார்த்தீரகளே ஐயா ஏன் விட்டுப்பிரிந்தீர்கள்

நான் உங்களுடன் வாழ்ந்த காலத்திலும் செல்லப்பிள்ளையாகவே வாழ்ந்தேன் எந்தக்குறையும் இல்லாமல் என்னருகில் இருந்து இங்கே வாப்பா இதில் இரு என்று என்னுடன் ஆறுதலாக கதைப்பீர்களே. ஐயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது மூன்று நேரமும் என்னை எதிர்பார்த்தபடி இருந்தீர்களே ஆசையான சாப்பாடுகளையும் கேட்டு கேட்டு இறுதியில் ஐஸ்கிறீம் கூட பருக்கினேன் வைத்தியசாலையில் இருக்கும் போது என்ன செய்வோம் என்ன செய்வோம் வீட்ட போவமா என்று புலம்பியபடி இருந்தீர்களே இன்று கொடிய நோய் பிடித்தோ ஐயா என்னையும் என் பிள்ளைகளையும் வழிநடத்த ஆறுதல் சொல்ல விண்ணிலிருந்து நடத்துவீர்கள் என உறுதியாக நம்புகின்றேன்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்களை வணங்கும்
உங்கள் அன்பு மனைவி
**க.சரஸ்வதி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் மனதிலிருந்து

தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை ஐயா நீங்கள் எங்களைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கி விட்டு என் பொறுப்பு முடிந்து விட்டது என்று சென்று வீட்டீர்களா ஐயா? லோகன், சந்திரன், மகேந்திரன், கேதீஸ், ஜெகதீஸ், என்று ஐந்து பிள்ளைகள் இருந்து காக்க முடியாத பாவிகளாக இருக்கின்றோம். ஐயா நீங்கள் எமக்குத் தந்த சிறப்புக்களை எம்முடன் இருந்து எம்பிள்ளைகளுடன் மகிழ்ந்து குலாவி இன்னும் அனுபவிக்கப் படைத்தவன் படியளக்கவில்லையே ஐயா சின்ன வயதில் இருந்து நாங்கள் எந்த விசயம் செய்தாலும் நீங்கள் முன்னின்று முன்னால் வந்து செய்தால்தான் அந்த விசயம் வெற்றியடையும் ஐயா நீங்கள் காலத்தை வென்று காவியம் ஆகிவிட்டீர்கள் ஐயா. உங்கள் எண்ணங்கள் நினைவுகள் கற்பனைகள் கனாக்கள் எம்மை என்றும் நல்வழிப்படுத்தும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

ஓம் சாந்தி

உங்களை வணங்கும்
தங்கள் மக்கள்
**க.லோகேஸ்வரன்**
**க.சந்திரேஸ்வரன்**
**க.மகேந்திரேஸ்வரன்**
**க.கேதீஸ்வரன்**
**க.ஜெகதீஸ்வரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் புலம்பல்

மண்ணில் பிறந்து நாமும் பெற்றோரை இழந்த பின்னர் அண்ணாமார் உள்ளார் என்று அன்புக்கு இலக்கணமாய் அமைதிக்கு அணிகலமாய் பண்புக்கு உறைவிடமாய், பாசமிகு இரத்தினமே! இன்புற்று வாழ்வாய் என இன்வாங்கு இருந்தோம் வண்புக்கு இலக்காய் வரிவரியாய் பயணமாய் ஆனாய் ஏழை மக்கள் ஆன எம்மை எண்ணி இன்றி மிதிக்கின்ற ஆல அணிகள் செய்தபல அக்கிரமமாம் கண்டெழுமுன் பரதேசம் அனுப்பியதால் பல வருடம் வாழும் அண்ணர் பற்றிய எரிபொருள் நெருப்பை பரிதவித்து பதைக்கிறோம். அம்மா, அக்காவை அன்பு நிறைய நன்றிகளை அன்று முதல் இன்று வரை அரவணைத்து வாழ்ந்தோம். இன்று போல் எம்முடனே உற்றதுணையாய் நீ இருப்பாய் என்றே மகிழ்ந்த எம்மை ஏங்க வைத்து சென்றாயோ?

கொப்பொடிந்த மரம்போல் கோலமிழந்து நாமிருக்க இப்புவியில் வாழ்விழந்து இறைவனுடன் சேர்ந்தாயோ எப்பொழுதும் எனது உணர்வு உம்மை எண்ணி துடிக்கின்றேன் அப்பனவன் ஆடுகின்ற அவன் துணை இனி எனக்கு

**சகோதரர்**
**வே.தம்பிராசா**
பாலாவோடை, களபூமி,
காரைநகர்.

# சகோதரிகள் புலம்பல்

மண்ணிலே பிறந்து நாமும்
பெற்றோரை இழந்த பின்னர் அண்ணன்மார்
உள்ளர் என்று ஆறுதல் கொண்டோம்
அண்ணாவும் சென்று விட்டார் அவர்
வழி மேலும் சென்று கண்ணீரை பெருக்கி
நாமும் காலத்தை போக்குவோம்

**சகோதரிகள்**
விளாளை களபூமி, காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் புலம்பல்

நேசம் நிறைந்த சித்தப்பா
நெஞ்சில் நிறைந்த சித்தப்பா
ஆசை காட்டும் சித்தப்பா
அறிவு சொல்லும் சித்தப்பா

பேசா தெங்கு சென்றீர்கள்
பேச வழியே தெரியாமல்
ஈசன் தானே எண்ணுகின்றோம்
இதுவே எங்கள் பணிப்பாகும்.

**பெறாமக்கள்**
களபூமி, பாலாவோடை,
காரைநகர்

# என் அருமை மாமா எங்கே?

மாமா நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து விட்டதை நம்மால் நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லையே மாமா மாமி எப்படித்தான் இந்தத்துயரை தாங்கினாரோ மருமக்களுடன் அன்பாகவும், பண்பாகவும், நல்லவிடயங்களை சொல்லித்தந்து நற்பெருமையுடன் வாழ்வதற்கு வழிசெய்து தருவீர்கள் இன்னும் பல வருடங்கள் எம்முடன் இருந்து எம்மையும் எம்பிள்ளைகளையும் வழிநடத்துவீர்கள் என்று நாம் நினைத்தோம். காலனுக்கு என்ன அவசரம் எந்த வித அறிகுறிதானும் இல்லாமல் அழைத்துவிட்டானே? ஆசை வார்த்தை காணவும், ஆலோசனைக்காகவும் நாம் ஏங்கிக் கொண்டிருந்தோம். நித்திரை விட்டெழுந்து கதைப்போம் என்று காத்திருந்தோம் அப்படி என்ன அவகம் இவ்வாறு இறைவன் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளமுடியாமல் தவிக்கும்

பாசமிகு மருமக்கள்
**லோ.சிவமலர்**
**ச.பவாணி**
**கே.நிஷாந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் மலரும் நினைவுகளிலிருந்து

அப்பப்பா உங்களை எங்கும் தேடியும் காணவில்லையே எங்களை விட்டு எங்கு சென்று வீட்டீர்கள் அப்பப்பா அண்ணாவும் தம்பியுமாக தேடுகின்றோம் காணவில்லையே அப்பம்மாவிடம் கேட்டால் சாமிகிட்ட போய்விட்டார் என்று சொல்லுகிறார். நீங்கள் எங்களுக்கு சிச்செட் , கக்ஸ் ரொபி கடையில் எடுத்து பொக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு வருவீர்கள் நாங்கள் இருவரும் பொக்கட்டினை காட்டுங்கள் அப்பப்பா என்று கேட்கும் போது எடுத்து எடுத்து இந்தா கஜன் இந்தா கோபி என்று தருவீர்கள் நாங்கள் சாப்பிடும் போது சாப்பாட்டை ஸ்ரூலிற்கு கொண்டு வாங்கள் சாப்பிடுவோம் என்று சொல்லி சாப்பிடு சாப்பிடு என்று சொல்லிக்கொண்டு இருப்பீர்கள் அம்மா அப்பா விட்டு வேலைக்கு சென்றாலும் எங்களை கண்ணும் கருத்துமாக அன்பாக அணைப்பீரகளே அப்பம்மாவைக் கொண்டு தண்ணீா தேனீா எல்லாம் வேண்டித்தருவீரகளே அப்பப்பா எங்கு சென்றீர்கள். தேவாரம் ஆத்திசூடி சொல்லித்தருவீர்களே இதையெல்லாம் ஞாபகப் படுத்திக் கொண்டு இருப்பீர்கள் கேற்றைத் திறந்து வரும்போது கோபி, கஜன் என்று கூப்பிட்டபடியே வந்து கதைவைத்திறப்பீரகளே கோபியும் கஜனும் உங்களைப் பார்க்க கதை கேட்க ஆசைப்படுகிறோம் எங்கும் காணவில்லையே எங்கள் இருவரையும் பார்க்க வரமாட்டீர்களா அப்பப்பா?

அப்பப்பாவை பார்க்க கொழும்பு அரசினர் பொது வைத்தியசாலையில் நாங்கள் இருவரும் வந்தபோது எங்களை கோபிதரன் ஹம்ஷிதரன் என்று அழைத்து அருகில் வைத்து பார்த்து சிரித்து கதை கேட்டீர்களே வருஷம் வருகிறது நான் வீட்டே வாறேன் நீங்கள் வீட்டிற்கு போங்கள் என்று அனுப்பி வைத்தீரகளே அப்பப்பா

அன்புப் பேரப்பிள்ளைகளின்
அன்பு முத்தங்களுடன்
**கோபிதரன், ஹம்ஷிதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீவன் சிவத்தை அடைந்தது

உலகில் மக்கள் ஏன் அவதரிக்கிறார்கள் என்பதை தெளிவதற்கு பல சமயங்கள் சமயகுருமார்கள், அறிஞர்கள் பல கருத்துக்களை தெளிவுபடுத்தியுள்ளார்கள் அவற்றுள்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்றல்
மனிதப் பிறவியும் வேண்டுவதே
இந்த மானிலத்தே

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை நேர் கண்டு தொழுதற்கும், பிறவியில் வரும் பிரப்தம் சஞ்சிதம் ஆசாமியார் என்ற தொடர் வினைகளை குருவின் உபதேசத்தில் நீக்கி உண்மை நிலையாகிய மலப்பரிபாகம் சத்தினிபாதம் இருவினைஒப்பு கைவரப் பெற்று ஆண்டவரின் திருவடி கமல நிலவில் தங்கி மகிழ்ந்து இருப்பதாம் இந்த வகையில் 1945ம் ஆண்டு காரைநகரில் பாலவோடையில் வேலுப்பிள்ளை கனகரத்தினம் பிறந்து கல்விகற்று குடும்ப நிலை கண்டு பிள்ளைகள் பெற்று அதிகம் பேசாதவராகி ஒழுக்க சீராகவும் 31.03.2009 அன்று செவ்வாய்க்கிழமை அவருடைய உடலில் இருந்த உயிர் பிரிந்து இறைவன் அடி சேர்ந்தார்.

மைத்துனர்
**வேலுப்பிள்ளை நடராசா**
காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை யார் தான் வெல்ல முடியும்

**நெஞ்சில் நிறைந்து நிற்கும் மைத்துனர்கள்**
**திரு.கனகரத்தினம்**
**அவர்கள்**


இந்த மண்ணில் பிறந்தோர் யாவரும் என்றோ ஒரு நாள் இறப்பது நிச்சம் அந்த ஆண்டவன் நியதியை ஒருவராலும் மாற்றி அமைக்க முடியாது.

பொறுமை, கடமை கண்ணியம் கட்டுப்பாடு அன்பு இரக்கம் என்னும் பண்புகளுக்கு அமைவாக மைத்துனர் என்று இல்லாமல் தந்தைபோல் எம்முடன் பழகி வாழ்ந்துவந்தார். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கும் மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர்களுக்கும் ஒருபேரிழப்பு ஆகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திக்கரை முருகப் பெருமானின் பாதாரவிந்தங்களை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மைத்துனர்**
திக்கரை களபூமி, காரைநகர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

மனிதன் பூமியில் எப்பொழுது பிறந்தானோ இறப்பது அன்று நிச்சயப்பட்டு விடும் என்று சமயங்கள் கூறுகின்றன ஆனாலும்

மரணத்தை வென்றவர் யாரும் இல்லை மகா தேவனான பரம் பொருளுக்கே அல்லாமல் மற்றவர்க்கும் நித்திய பெரு வாழ்வு இல்லை

அரிது அரிது மானிடராதல் அரிது
அதனிலும் அரிது மாண்புற வாழ்தல்

இதற்கேற்ப அமரர் வேலுப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார் மனிதனின் படைப்பான கைக்கடிகாரம் கணினி மரணம் மரணம் என இடைவிடாது தெரிவித்துக்கொண்டே இருக்கின்றது. மரணபயம் சிறிதும் இன்றி மனவலிமையுடன் இறப்பு ஒன்று தான் என்றைக்குமே நிச்சயம் என்பதை வள்ளுவர் எடுத்துக் காட்டுகின்றார்.

தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சம் என்பது போல அவருடைய எல்லாப் பிள்ளைகளும் இன்று நமக்கு பெருகிப் பெருமையுடன் வாழ்கின்றனர். அன்னாரின் இழப்பு குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது அவரது உறவுகளுக்கு ஒரு பேரிழப்பு ஆகும். இத்தகைய ஆத்மா இழப்பு ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று அகில மாதா பவனம் என போற்றப்படுகின்ற பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பிரம்மஸ்ரீ.கு.சண்முகராஜகுருக்கள்**
**பிரதமசிவாச்சாரியர்**
பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி
அம்மன் தேவஸ்தானம்
பயிர்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி
தேவஸ்தானம்

பாலாவோடை
களபூமி, காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகம கிரியா தத்துவ நிதி
**சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள்** J.P (நந்தாவில்) அவர்கள்
(தலைவர், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம்)
வழங்கிய

# இரங்கல் உரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

என்ற வள்ளுவர் குறளுக்கேற்ற நல்ல மனிதராக வாழ்ந்த காரைநகர் பாலாவோடை களபூமியைச் சேர்ந்த அமரர் வேலுப்பிள்ளை கனகரத்தினம் அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாத இழப்பு சாந்தமான தோற்றம் புன்சிரிப்பு தவமும் செய்யமுடியாத சுபாவம் இனிமையான பேச்சு, இரக்கமான சிந்தனை, யாருக்கும் தீங்கு நினைக்காத உள்ளம், ஆழமான கடவுள் பக்தி,

உற்றார் உறவினர்களுக்கு மட்டுமல்லாமல் அயலவர், அன்னியருக்கும் கூட உதவி செய்யும் ஆழமான பண்பு கொண்ட ஒரு அற்புதமான மனிதர். இவர் தனது 64 ஆண்டுகால வாழ்வில் அன்பான மனைவியும், பஞ்சபாண்டவர்கள் போல் 5 ஆண் பிள்ளைகளையும் பெற்று, அவர் தம் சிறப்பான வாழ்க்கையையும் கண்டு பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ந்திருந்து இறுதிக் காலத்தையும் தனது மூத்த மகன் லோகேஸ்வரன் அவர்களுடன் மகிழ்வாக வாழ்ந்து இறைபதம் அடைந்தார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என் குலதெய்வமாம் மனோன்மணி அம்பாளின் பாதங்களை இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

'ஜெயகௌரிவாசம்'
இல: 101, லக்சபானாறோட்,
தோணிக்கல்,
வவுனியா.

**முத்துஜெயந்தி நாதக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகளொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயமும்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

***விநாயகர் அகவல் முற்றிற்று***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்தசஷ்டி கவசம்



## காப்பு

**துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்து(து)ஓங்கும்**
**நிட்டையுங் கைகூடும். நிமலர் அருள்கந்தர்**
**சஷ்டி கவசம் தனை.**

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

ஷஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சி'டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரவண வீரா நமோ நம
நிபவ சரவண வீரா நமோ நம
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூசணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகன
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அருள்வேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்னை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளி வாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார்குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரி அன்னமுஞ் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ்கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்

## 1) இலங்கை

| | | | |
|---|---|---|---|
| 1) | தேசிய கீதத்தை இயற்றியவர் | - | ஆனந்த சமரக்கோன் |
| 2) | தேசிய மலர் | - | நீலோற்பலம் |
| 3) | தேசிய மரம் | - | நாகமரம் |
| 4) | தேசிய விளையாட்டு | - | கரப்பந்தாட்டம் |
| 5) | தேசிய கொடி | - | வாளேந்திய சிங்கம் |
| 6) | தேசிய பறவை | - | காட்டுக்கோழி |
| 7) | தேசிய மிருகம் | - | யானை |
| 8) | தேசிய புனித மரம் | - | வெள்ளரசு |
| 9) | தலைநகரம் | - | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே |
| 10) | பரப்பளவு | - | 65610 சதுர கிலோ மீற்றர் |
| 11) | மாகாணங்கள் | - | 09 |
| 12) | பாராளுமன்ற ஆசனங்கள் | - | 225 |
| 13) | நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதி | - | J.R. ஜெயவர்த்தனா |
| 14) | முதற் பிரதமர் | - | D.S. சேனாநாயக்கா |

## 2) உலகில் மிகப்பெரியது

| | | | |
|---|---|---|---|
| 1) | கண்டம் | - | ஆசியா |
| 2) | பாலைவனம் | - | சகாரா |
| 3) | தீவு | - | கிறின்லாந்து |
| 4) | தேவாலயம் | - | சென் பீற்றர்ஸ் தேவாலயம் (உரோம புரியில்) |
| 5) | சமுத்திரம் | - | பசுபிக் சமுத்திரம் |
| 6) | அரண்மனை | - | வத்திக்கான் |
| 7) | சிலை | - | சுந்தரசிலை (நியூயோர்க்) |
| 8) | நீர் வீழ்ச்சி | - | வெனிசலா (பிறேசில்) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) உலகில் மிக நீண்டன

| | | |
|---|---|---|
| 1) | நதி | - நைல் நதி |
| 2) | சுவர் | - சீனப்பெருஞ்சுவர் |

4) உலகில் மிக உயர்ந்தன

| | | |
|---|---|---|
| 1) | மலைச்சிகரம் | - எவரெஸ்ட் |
| 2) | அணைக்கட்டு | - எவர்டாம் |
| 3) | பறவை | - தீக்கோழி |
| 4) | விலங்கு | - ஒட்டகச்சிவிங்கி |
| 5) | கோபுரம் | - ஈபிள் கோபுரம் |

5) பிரபல நூல்களும் எழுதியவர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1) | திருக்குறள் | - திருவள்ளுவர் | |
| 2) | இராமாயணம் | - வான்மீகி | - வடமொழி |
| | | - கம்பர் | - தமிழ்மொழி |
| 3) | மகாபாரதம் | - வேதவியாசர் | |
| 4) | சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் | |
| 5) | கந்தபுராணம் | - சச்சியப்ப சிவாச்சாரியர் | |
| 6) | பெரியபுராணம் | - சேக்கிழார் | |
| 7) | சீறாப்புராணம் | - உமறுப் புலவர் | |
| 8) | தேம்பாவணி | - வீரமாமுனிவர் | |
| 9) | இயேசு காவியம் | - கண்ணதாசன் | |
| 10) | கீதாஞ்சலி | - இரவீந்திரநாத்தாகூர் | |
| 11) | மகாவம்சம் | - மகாராமதேரர் | |
| 12) | இலியட் கடிசி | - ஹோமர் | |
| 13) | சத்திய சோதனை | - மகாத்மாகாந்தி | |
| 14) | சாகுந்தலம் | - காளிதாசன் | |
| 15) | அர்த்தசாஸ்திரம் | - கௌலயன் | |
| 16) | அக்கினி சிறகுகள் | - அப்துல்கலாம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித தர்மம்

ஏழ்மையிலும் - நேர்மை
கோபத்திலும் - பொறுமை
தோல்வியிலும் - விடாமுயற்சி
வறுமையிலும் - பரோபகாரம்
துன்பத்திலும் - தைரியம்
செல்வத்திலும் - எளிமை
பதவியிலும் - பணிவு

## செல்வங்கள் பதினாறு

- புகழ்
- கல்வி
- வலிமை
- வெற்றி
- நன்மக்கள்
- பொன்
- நெல்
- நுகர்ச்சி
- நல்வாழ்வு
- அறிவு
- அழகு
- பொறுமை
- இளமை
- துணிவு
- நோயின்மை
- நீண்ட ஆயுள்

## உலக பெரும் தவறுகள்

உழைக்காமல் ஈட்டிய செல்வம்
மனட்சாட்சி இல்லாத இன்பம்
பண்பு இல்லாத அறிவு
நல்லொழுக்கம் இல்லாத வாணிபம்
மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
தியாகம் இல்லாத வணக்கம்
அடிப்படைக் கொள்கை இல்லாத அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணக் கிரியைகள்

திருமணக் கிரியை நடைபெறும் மண்டபத்தில் மணவறை கிழக்கு நோக்கி அமைக்கப்படும். அதன் எதிரில் அரசாணி அமைக்கப்படும். மாவிலை தோரணம் மண்டபத்தை அலங்கரிக்கும் இறைவன் சத்தியோசாத முகத்தோடு அம்பாள் சமேதராக மேற்கு நோக்கிக் கும்பவடிவில் அமைந்திருப்பார் மணவறையில் மணமகன் இறைவனாகவும் மணமகள் இறைவியாகவும் பாவனை செய்யப்படுகின்றார்.

### பஞ்சகௌவிய பூசை

பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவற்றோடு தர்ப்பை சேர்த்து நீரும் கலக்கப்பட்டு பூசிக்கப்படுகிறது. இது ஸ்தானசுத்தி திரவியசுத்தி, மணமகளின் சுத்தி என்பவற்றில் பொருட்டு உபயோகிக்கப்படும் மணமக்களுக்கு சங்கற்பம் செய்து காப்புக்கட்டுமுன் அவர்களைக் கொண்டு பஞ்சகௌவிய நீரை மூன்றுமுறை ஆசமனம் (குடிப்பித்தல்) செய்விக்கப்படும்.

### சங்கற்பம்

நடைபெறும் திருமணக்கிரியை இடையூறின்றி நிறைவேறுதற் பொருட்டு விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து வேண்டுதல் சங்கற்பமாகும். கன்னியதானம் செய்வதற்கு மணமக்களின் தந்தைக்கும் நாத்தி முகத்திற்கு மணமகனின் தந்தைக்கும் சங்கற்பம் செய்யப்படுகின்றது. சங்கற்பம் செய்யப்படடதற்கு அறிகுறியாக பவித்திரம் எனும் தருப்பையாலகிய மோதிரம் இடப்படுகிறது.

### விக்னேஸ்வர பூசை

திருமணக்கிரியையில் விநாயகர் மஞ்சள் மாவினால் உருவாக்கப்படுகின்றார் மங்கலமாக விளங்குவார் முறைப்படி பூசை செய்து தேங்காயுடைத்து வழிபடப்படுகிறார். உலகில் நடைபெறும் காரியங்களுக்கெல்லாம் தனிமுதல்வர் விநாயகரே.

### ரட்சா பந்தம்

இதைக் காப்புக்கட்டுதல் எனக்கூறுவதுண்டு மணமகன் மணமகள் இருவருக்கும் தனித்தனியாக இந்தக்காப்பு கட்டபப்டும். அதாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தகருமம் இடையூறின்றி இனிதே நிறைவேறவும் வேறுசெயல் சிந்தனை இன்றி குறித்த கருமசிந்தனையில் மூழ்கி இருக்கவும் எல்லாப் பாவங்களையும் நீக்கிப் புனிதமயமாக இந்த ரட்சா பந்தனம் செய்யப்படுகின்றது.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து பிறிதொரு இடத்தில் இருத்திப் பெண்ணை அழைத்து வருவார்கள் சில இடங்களில் மணமகன் அப்படியே இருக்க பெண்ணை அழைத்துவருவதும் உண்டு. இதற்குரிய காரணம் பெண்ணுக்குக் காப்புக்கட்டாமல் மணமகனைப் பார்க்கக்கூடாது என்கின்ற ஒரு நியதியில் மணமகனைப் பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின்றனர். ஆனால் பெண் அழைத்து வரப்படும்போது முகத்திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன் மணவறையில் இருக்கவே பெண்ணையும் வைத்துக் காப்புக் கட்டலாம் என்கின்ற மரபிலும் இருவிதமாய் இக்கிரியை செய்வதுண்டு. மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் வரை லட்சுமி நாராயணராக மணமகனையும் பெண்ணையும் பாவனை செய்து கிரியை நிகழ்த்தி, தாலி கட்டியபின் சிவசக்தி ரூபமாக அமர்த்திக் கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே முதலில் பெண் வலது பக்கமும் ஆண் இடது பக்கமும் தாலி கட்டியபின் ஆண் வலது பக்கமாகவும் பெண் இடது பக்கமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது உடம்பின் இடது பாகத்தைச் சக்திக்கே கொடுத்துள்ளார். என்கின்ற தத்துவம் இதனைப் புலப்படுத்தும்.

### சந்திர கும்ப பூசை

பயிர்களுக்கு அதிபதியான சந்திரன் பூசிக்கப்படுகின்றார். சந்திரனைச் சுற்றிவர நவதானியங்கள் முளையிடப்படுகின்றன. உயிரின் வளர்ச்சிக்கு வித்திடப்படுபவை தானியங்கள் சந்திரனை சுற்றியுள்ள பாத்திரங்களில் முளையிடப்பட்ட தானியங்களில் வைகர்தனன் முதலாய பன்னிரண்டு சூரியர்களும் அர்ச்சிக்கப்படுகின்றார். மங்களக் கிரியைகள் யாவற்றிலும் இவ்வங்குரார்ப்பணம் இடம்பெறுகின்றது. கிரியைகளின் பயனை இதிலிருந்து அறியலாம்.

### சிவகும்பபூசை, சிவாக்கினி வளர்த்தல்

சிவன் குடும்பத்திலும் அக்கினியிலும் மந்திரரூபமாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசிக்கப்படுகின்றார். இறைவனுக்கு விசேடமான இருப்பிடங்களுள் ஒன்று அக்கினி மனிதனால் கொடுக்கப்படும் திரவியங்களைத் தெய்வத்திற்க்கு கொடுப்பதும் தெய்வத்தால் கொடுக்கப்பட்டவற்றை மனிதனுக்கு கொடுத்தலும் அக்கினியின் தொழிலாகும். அக்கினி சாட்சிசிப் பொருளாகவும் விளங்குகின்றது. மனிதன் அக்கினியைக் கொண்டு சத்தியம் செய்கின்றான்.

***கன்னிகாதனம் செய்தலும் நாந்திமுகமும்***

கன்னிகாதானம் செய்யும் போது ஒத்த கோத்திரத்து மணக்கள் என்பதனை சபையினர் அறியும் பொருட்டு புரோகிதர் இருவழி கோத்திரத்தையும் கூறுவர் வம்சாவழி பிதுர்களை நினைவு கூர்ந்து திருப்தியுரும் வகையில் நாந்திதானம் (அரிசி, மரக்கறி, பணம் வைத்து ) நவக்கிரக பிரீதி தானம் (வஸ்திரம், பணம்) போன்றவற்றை குருக்களுக்கும் உதவிகுருமார்களுக்கும் தானமாக கொடுத்தல்

அதன் பின் சம்பந்திகள் ஒருவருக்கொருவர் உபசாரம் சொய்தல் (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை சபைச் சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிரப்பாகும்) அதன் பின் கிழக்கு முகமாய் (மணவறையிலிருந்து சபையோரை பார்க்கும் வண்ணம் ) மணமகன் தந்தை தாய் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம் , தேங்காய், மஞ்சல் துண்டு, சில்லறைக் காசு, பொன், மலர் போன்ற பொருட்கள் தட்டில் வைத்து பெண்ணின் கையையும் தட்டிலே வைத்து சேர்த்து பிடித்து மணமகளின் பெற்றோர் இந்த பெண்ணை தத்தம் செய்கின்றோம் என தாரைவார்த்து மணமகனின் கையிலே மணமகளைக் கொடுப்பார் அக்கினி, சபையோர், சந்திரன், சூரியன், சிவன், அம்பாள், சாட்ச்சியாக ஒருநாளும் இனியுன்னைப் பிரியேன் என்று சத்திய வாக்குச் செய்து மணமகன் அதனை ஏற்றுக்கொள்வர்.

நாத்தி முகம் என்பது மணமகனின் பிதிரர் வழியின் ஆசீர்வாதம் பெறுதலாகும். சந்ததி வளர்ச்சியின் பொருட்டு இது நடைபெறும்.

***கூறை கொடுத்தல், மாலையிடல்***

புதிய வஸ்திரம், மாலை, அலங்காரபொருட்கள், மஞ்கல், குங்குமம், தேஜஸ்பழம், மஞ்சல் நிறமான வாழைப்பழம் என்பன கூறையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும். இவற்றை எல்லோரையும் கொண்டு தொடுவித்து ஆசீர்வாதம் பெறுவர் மணமகன் மணமகளைத் தனக்குறியவளாக்கும் நோக்குடன் உடையை கொடுத்தலை இது குறிக்கும். மாலையிடுதல் மாங்கல்ய தரணத்திற்கு முன் அல்லது பின் நடைபெறுவதுண்டு.

***மாங்கல்ய தாணம்***

ஆதியில் மங்களநாண் மஞ்சல் கயிற்றினால் ஆக்கப்பட்டிருந்தது. தற்போது பொன்னல் இழைக்கப்படுகின்றது. சுபவேளையில் உருக்கப்பட்ட பொன்னால் தாலி செய்யப்படும். சிவகோத்திரத்தாருக்குத் தாலியில் திரிசூலம் பொறித்திருப்பார் தாலியில் மகாலட்சுமி பூசிக்கப்படுகின்றாள். மாங்கல்யதாரணம் முடிந்த பின் மணமகள் மணமகனின் இடப்பாகத்தில் இடம்பெருகின்றாள் மாங்கள்யதாரணம் முடிந்த பின் மணமக்கள் சிவன் அம்பாளாகப் பாவனை செய்யப்படுவர்.

***பால் பழம் கொடுத்தல் பூதாக்கலம் உண்ணல்***

மணமக்களிடையே நெருக்கத்தை ஏற்படுத்தல் இவ்வழக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் பாலும், பழமும் சேர்ந்த கலவையை மணமகளைக் கொண்டு முதலிலும் மணமகனைக் கொண்டு அடுத்தும் கொடுப்பிப்பர். இதனையடுத்துச் சோறு கொடுத்தல் என்னும் பூதாக்கலம் நடைபெறும்.

***கோதரிசனம்***

கோதரிசனம் என்பது பசுக்கன்றை மணமக்கள் இருவரும் தரிசிப்பதாகும். பசுவில் தேவர்கள் உறைகின்றார்கள் என்பர். கோவின் பின்புறத்தில் மகாலட்சுமி வீற்றிருக்கின்றாள் எனக் கூறப்படுகின்றது. இதனால் கோதரினம் இடம் பெறுகின்றது.

***அம்மி மிதித்தல்***

கோதரிசனத்தைத் தொடர்ந்து வாழ்க்கையின் நெறியை வழிப்படுத்தும் அம்சங்கள் இடம்பெறுகின்றன. மணமகன் மணமகளின் வலது காலை அம்மியில் தூக்கி வைப்பார். அம்மி நிலையாம் தன்மையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துவதாகும். கற்பிலும் நிலையாக இருத்தல் வேண்டும் என்பதை இது குறிக்கிறது என்பர். சிலர் அகலிகை வரலாற்றைக் குறிக்கிறது என்பர்.

மணமக்கள் மூன்றுமுறை வலம் வந்தபின் சிவாக்கினிக்கு பூர்ணகுதி செய்து வழிபடுவர்.

*அருந்ததி பார்த்தல்*

கற்பு நெறியில் மிகச் சிறந்தவராய் விளங்கியவள் அருந்ததி என்னும் மங்கை அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திரமாக என்றும் ஜொலித்துக் கொண்டிருக்கிறாள். பெண்ணின் பெருமையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசை பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக்கெனக் கும்பம் வைத்து கும்பத்திலே பூப்போட்டு வணங்குவதும் உண்டு.

*மோதிரம் போட்டு எடுத்தல்*

இது கிரியைகளில் கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும் சபை சிறப்பிக்கவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரிலே போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கைவிட்டு எடுக்க வேண்டும். மணமக்கள் கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தையும் இது குறிக்கும்.

*ஆசிர்வாதமும் அறுகரிசியிடலும்*

புரோகிதர் வடமொழிச் சுலோகங்களைக் கூறி மணமக்களை ஆசீர்வதிப்பர். பின் மணமக்களின் உறவினர்கள் அறுகரிசியிட்டு வாழ்த்துவர். இறைவனின் அர்ச்சனை வழிபாட்டில் அட்சதையும் (அரிசியும்) அறுகும் முக்கிய இடம்பெறுகின்றன. அறுகு சிறந்த மருத்துவ சஞ்சீவி பரந்த வேரூன்றி வளர்வது அட்சதை ஆன்மீக வளர்ச்சிச் சாதனம் பதினாறு பேறும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டி அறுகரிசியிட்டு வாழ்த்துவர்.

இவ்வாறு அறுகரிசி போடுவதில் மாறுபட்ட தன்மையைக் காணமுடியும். சிலர் கீழிருந்து மேல் நோக்கியும் சிலர் மேலிருந்து கீழ் நோக்கியும் ஆசிர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை முழந்தாளிலும் புஜத்திலும் சிரசிலும் அறுகரிசி இட்டு ஆசீர்வதிப்பதே முறையாகும் மனிதனுடைய உடன் பஞ்சபூத அமைப்பை உடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆராத்தி எடுத்தல்:*

திருமணச் சடங்கின் முடிவில் இது செய்யப்படுவதாகும் கண்திருஷ்டி கழிப்பதே ஆராத்தியின் நோக்கமாகிறது மணமக்களுக்கு கண்ணூறு கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன் மேல் கற்பூரம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்றுமுறை சுற்றிக் கற்பூரத்தை அனைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல் முறையாகும் ஆராத்தி எடுத்தபின் பூரண கும்பம் திருவிளக்குச் சகிதமாக மணமகள் வலதுகாலை முன்வைத்து இல்லில் புகுந்து அறவாழ்வை மேற்கொள்வர்.

(மேற் கூறியற்றை விட பல புதிய கிரியைகளும் தற்போது புகுந்துவிட்டன)

*கிரியைகளும் அர்த்தங்களும்*

மணமகன் - சிவன்

மணமகள் - பார்வதி

தானியம் - உயிர்

அறுகு - வளர்ச்சி

அரசாணி - முருக்கமரம் முள் இந்திரனின் யோனியை குறிக்கும்

நாந்திமுகம் - பிதிர் மகிழ்ச்சிக்காக

கோதரிசனம் - மகாலட்சுமி தரிசனம்

மஞ்சல் - மங்களம் - கிருமிநாசினி

குங்குமம் - சக்தி

மூன்று முடிச்சி - உயர்வு, தாழ்வு, சமநிலை

நவக்கிரகம் - தோஷ, நிவிர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமொழிகள்

- நல்லவன் நட்பை பொன் கொடுத்தாலும் கொள்க
  தீயவர் நட்பை பொன் கொடுத்தாவது தள்ளுக
- இந்த உலகில் எப்படியும் வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற அளவுக்கு இங்கே இன்பங்கள் நிறைந்துள்ளன
  இதைப்போலவே உடனடியாக மடிந்தாக வேண்டும் என்ற அளவிற்கு துன்பங்களும் நிறைந்துள்ளன

(ஆபிரகாம் இலிங்கன்)

- எத்தனை குழப்பம் நேர்ந்தாலும் பொய்மை மறந்து விடும் மெய்மையே மேலே உயர்ந்து நிற்கும்

(காந்தியடிகள்)

- தனக்கு எதைச் செய்து கொள்ள விரும்பமாட்டோமோ அதை பிறருக்குச் செய்யாமலிருப்பதே தர்மத்தின் சாரமாகும்.

(சிவானந்த சுவாமிகள்)

- வெற்றியிலும் தோல்வியிலும் லாபத்திலும் நஷ்டத்திலும் இன்பத்திலும் துன்பத்திலும் நிலை தடுமாறாது ஒரே மாதிரியாக இருங்கள் உங்கள் மனதை அதற்கு ஏற்ப ஜாக்கிரதையாக பழகுங்கள்
  ஆனந்தத்தின் கதவுகளைத் திறக்கும் சாவி இது தானம் கர்மயோகத்தின் ஏகசியமும் அதன் வெற்றியும் இதுதான்

(சத்தியசாயிபகவான்)

வெற்றியின் இரகசியம்

- அன்பு காட்டு ஆனால் அடிமையாகிவிடாதே
- இரங்காட்டு ஆனால் ஏமாந்து விடாதே
- பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
- கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே
- சிக்கனமாய் இரு அனால் கஞ்சனாய் இராதே
- வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே
- சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே
- தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே
- பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே
- உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்துவிடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் வாழ்விழல் சில பொருட்கள்

## வெற்றிலை

வெற்றிலையின் நுனி பகுதியில் சரஸ்வதியும் நடுப்பாகத்தில் லட்சுமியும், காம்பு பகுதியில் மூதேவியும் வசிக்கின்றனர். இதனால் வெற்றிலையை பயன்படுத்தும் போது காம்புப்பகுதி நீக்கப்பட வேண்டும் வெற்றிலை போடும்போது காம்பை அகற்றிவிட்டு நுணியை புத்தியில் ஒட்டிவிடுவார்கள் ஏனெனில் சரஸ்வதியை புத்தியில் இருத்தலே வெற்றிலை மங்களப் பொருள் அதனால் தான் வெற்றிலை வைத்து அழைக்கும் சம்பிரதாயம் பேணப்படுகிறது. வெற்றிலை சாப்பிடுவது என்று யாரும் சொல்வதில்லை வெற்றிலை போடுவது என்று தான் சொல்வார்கள் ஏனெனில் மங்கல அலங்கார பொருட்களான காப்பு போடுவது சங்கிலி போடுவது போல வெற்றிலை போடுவது என்றாயிற்று எமது மதத்தில் வெற்றிலையில்லாத நிகழ்வுகளே இல்லை. காரணம் வெற்றிலையில் மஹாலக்ஷ்மி உறைவதால் ஆகும். வெற்றிலை கொடுக்கும் போது காம்பு கொடுப்பவரின் பக்கம் நுணி வாங்குபவர் பக்கமும் இருக்க வேண்டும்மென்பது சாஸ்திர விதி.

மேலும் எல்லா தெய்வங்களுக்கும் நெய்வேத்தியமாக படைக்கப்படும் பொருள் வெற்றிலையே. அத்துடன் இலைவகைகளில் நெய்வேத்தியமாக பயன்படுத்தப்படும் இலையும் வெற்றிலையே ஆகும்.

## மாவிலை தோரணம்.

மங்கல தோரணமானது தென்னைமர மஞ்சள்நிற குருத்தோலையில் மூன்று அல்லது ஐந்து தளங்களுடன் இருமுனைகளும் பூமியை பார்க்கும் வண்ணம் கட்டப்பட வேண்டும் 3 தளம் மும்மலங்களை நீக்கி முத்தியடைவதையும், 5 தளம் ஐம்புலன்களையும் அடக்கி முத்தியடைவதையும் குறிக்கும்.

கண், காது, தோல், நாக்கு, மூக்கு, ஆகிய ஞானேந்திரங்களாளும் வாய், கை, பாதம், எருவாய், கருவாய் ஆகிய கர்மேந்திரங்களாளும் பூமியில் வாழ்ந்தாலும் பூமி எனும் இறைவனை நோக்கியே எமது செயற்பாடுகள் அமையும் என மங்கல தோரணம் விளங்கும்.

அறம், பொருள், இன்பம் அனுபவித்த ஆன்மா பூலோக வாழ்வை முடித்து மேலோக வாழ்விற்கு வீடுபேற்றை நோக்கி இருவினைகளுடன் செல்கிறது என்பதை விளக்கவே அமங்கல தோரணம் கட்டப்படும். அமங்கல தோரணமானது 3 தளங்களுடன் முனைகள் வானை நோக்கியவாறு அமையுமாறு கட்டப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோரணம் கட்டப்படும் நிலையை பார்த்து வீட்டில்த எவ்வகையான நிகழ்வு என்பதை அறியாலாம். மங்கல நிகழ்வுகளில் மாவிலை குத்தும்போது 05, 07. 09 எனும் ரீதியில் பெண்கள் தலை குனிந்து வரவேற்கின்றனர். எனும் பாவனையில் மாவிலை காம்பு முன்பக்கம் எடுத்து குத்துதல் வேண்டும்.

அமங்கல நிகழ்வுகளில் மாவிலை குத்தும்போது இவ்வாறான நிகழ்வுகள் மீண்டுமொருமுறை நடைபெறகூடாது என்னும் பாவனையில் மாவிலை காம்பு பின்பக்கம் எடுத்து குத்துதல் வேண்டும்.

**பிரம்மஸ்ரீ.நா.பிரபாகர சர்மா**

# பழமொழிகள்

- **அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்.**
  Too much of anything is good for nothing.

- **அரசன் அன்றே கொல்லும்**
  **தெய்வம் நின் கொல்லும்.**
  The mills of God grind slow but sure

- **ஆழம் அறியாமல் காலை விடாதே.**
  Look before you leap.

- **இக்கரைக்கு அக்கரை பச்சை.**
  Distance lends enchantment to the view

- **எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.**
  East or west home is best

- **கல்வி கரையில் கற்பவர் நாள் சில**
  Art is long and life is short

- **தான் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்**
  Mon porposes, God disposed



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணணி கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | Software | - | மென்பாகம்/மென்பொருள் |
| 02. | Central Processing Unit | - | மையச்செயலகம் |
| 03. | Rom | - | அழியா நினைவகம் |
| 04. | Ram | - | நிலையா நினைவகம் |
| 05. | Monitor | - | காட்சித் திரை |
| 06. | Key board | - | விசைப்பலகை |
| 07. | Scanner | - | வருடி/நகலெடுப்பான் |
| 08. | User | - | பயனாளர் |
| 09. | Floppy disk | - | நெகிழ்வட்டு |
| 10. | Compact disk | - | குறுவட்டு |
| 11. | Disk Drive | - | வட்டு இயக்கி |
| 12. | File | - | கோப்பு |
| 13. | Directory | - | கோப்பகம் |
| 14. | Printer | - | அச்சுப்பொறி |
| 15. | Pass Word | - | கடவுச் சொல் |
| 16. | Input devices | - | பயப்பு/உள்ளீட்டுச் சாதனங்கள் |
| 17. | Output Devices | - | பயப்பு/உள்ளீட்டுச் சாதனங்கள் |
| 18. | Hard ware | - | வன்பாகம்/வன்பொருள் |
| 19. | Home Page | - | தகவல் வீடு |
| 20. | Internet | - | இணையம் |
| 21. | Web Page | - | இணையத்தளம் |
| 22. | Word processor | - | சொல்லாளர் |
| 23. | Operation system | - | இயக்கத் தொகுப்பு |
| 24. | Internet web brower | - | இணையத்தள உலாவி |
| 25. | Keye | - | அழுத்திவிசை |
| 26. | Icon | - | சின்னம்/படவுரு |
| 27. | Input | - | செருக்க/உள்ளீடு |
| 28. | Inkjet printer | - | மையச்சுற்றுப் பொறி |
| 29. | Laser printer | - | ஒளியச்சுப் பொறி |
| 30. | Grammer checker | - | இலக்கணத் திருத்தி |
| 31. | Language Checker | - | மொழித்திருத்தி |
| 32. | Macros | - | ஆணைத்தொகுப்பு |
| 33. | Mail marge | - | அஞ்சல் இணை |
| 34. | Multi media | - | பல்லூடகம் |
| 35. | Multiple page preview | - | பலபக்க முன் காட்சி |
| 36. | Compression tehnigue | - | இறுக்கச் சுருக்கும் தொழில்நுட்பம் |
| 37. | Digital Data | - | துடிமத் தகவல் |
| 38. | CD Rom drive | - | குறுவட்டு இயக்கி |
| 39. | Video disk | - | ஒளித்தொற்றவட்டு |
| 40. | Net ware | - | வலைப் பொருள் |
| 41. | Mouse | - | சுட்டி/சொடுக்கி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நன்றி

# துயர் பகிர்ந்தோர்கள் பாதம் சொரிந்தனம்

எம் அன்புக்குரிய குடும்பத்தலைவரைச் சடுதியில் நாம் இழந்து ஆறாத்துயர் அடைந்த வேளை உடனோடி வந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் அவர் மேற்கொண்ட பற்றினாலும் பாசத்தினாலும் பெருந்தன்மையோடு அவரின் புகழுடலை கொழும்பு பொது வைத்தியசாலையில் இருந்து அன்னாரின் இல்லத்திற்கு கொண்டு வருவதற்கு நேரம் காலம் பார்க்காமல் உதவியோருக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொலைபன்னி தொலைபேசி மூலமாக துயர் பகிர்ந்தோருக்கும் யாழ் பத்திரிகை மூலம் அஞ்சலி தெரிவித்தோருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி தெரிவித்தோருக்கும் தீக்கடன் நிறைவேற்றும் இறுதிக் கிரியைகளிலும், ஊர்வலத்திலும் கலந்து கொண்டோருக்கும் மேலும் அஸ்தி எடுத்து கல்லாற்றில் போடுவதற்கு உதவி யோருக்கும், மற்றம் 28.04.2009 கல்லாற்றில் கிரியைகள் நடைபெற்று 30.04.2009 அன்று அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்தோர் யாவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை நீனிலம் தெரிவிக்கின்றோம்.


இல: 231/1,
1ம் ஒழுங்கை,
குட்செட் வீதி,
தோணிக்கல், வவுனியா.

**இங்ஙனம்**
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக
நியதியும்,
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்"



வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா.தொ.பே: 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org